**S.C.No. 227 / 2024**

**PW1 – Thiru. Kamal anand**

**02.02.2026**

**(A1 to A3 are present)**

சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**நேரம் 14.50 மணி**

என்னிடம் காண்பிக்கப்படும் 9 புகைப்படங்களில் உள்ளது நான் தானா என்றால் நான் தான். என்னிடம் காண்பிக்கப்படும் 3 புகைப்படங்கள் நான் தங்கியிருந்த வீடா என்றால் அது எனக்கு தெரியவில்லை. மேற்படி 9 புகைப்படங்கள் **எ.த.சா.ஆ.1** முதல் **எ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 65B சான்றிதழ் **எ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.த.சா.ஆ.1ல் சிலிண்டரை நான் தான் எடுத்து செல்கிறேன் என்றால் சரிதான். எ.த.சா.ஆ.2ல் ஒரு அட்டைபெட்டியில் பொருட்களை வைத்து அட்டை பெட்டியை நான் தான் மூடுகிறேன் என்றால் சரிதான். எ.த.சா.ஆ.3ல் டி.வி.யை பாக்சில் வைப்பது நான் தான் என்றால் சரிதான். எ.த.சா.ஆ.4ல் என்ன பொருள் வைத்து மூடுகிறேன் என்றால் எனக்கு சரியாக தெரிவல்லை. உள்ளே டி.வி. இருக்கிறாஎன்று எனக்கு தெரியவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும் நான் தான் டி.வி. ஐ அந்த அட்டை பெட்டியினுள் பேக் செய்கிறேன் என்றால் சரியல்ல. எ.த.சா.ஆ.5ல் பொருட்களை நான் தான் அடுக்கி வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான். எ.த.சா.ஆ.6 பெட்டை நானும், அருகில் செண்ட்டிரிங்க் வேலை செய்யும் நபரும் தூக்கிக் கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். எ.த.சா.ஆ.7ன் படி எல்லாப் பொருட்களையும் பெட்டியில் வைத்து அடுக்கிக்கொண்டிருந்தது நான் தான் என்றால் சரிதான். எ.த.சா.ஆ.8ல் வீட்டிலிருந்து சில பொருட்களை நானே வெளியே எடுத்துக்கொண்டு வருகிறேன் என்றால் சரிதான். என் கழுத்தை பிடித்து நகரவிடாமல் செய்து பொருட்களை வீசி வெளியே போட்டுவிட்டார்கள் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை நகர விடாமல் கழுத்தை

பிடித்திருந்தாலோ, எனக்கு காயம் ஏற்பட்டிருக்கும் அவ்வாறு எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை ஆகவே நான் சொன்னது போல சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனக்கு காயம் ஏற்பட்டது. எனக்கு காயம் ஏற்பட்டது என்பதற்கு ஆதாரமாக போலீசாரிடம் ஆவணம் ஏதேனும் சமர்பித்தேனா என்றால் சமர்பிக்கவில்லை. அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று சான்றிதழ் வாங்க சொன்னார்கள். அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி புகைப்படங்களில் கூட எனக்கு காயம் ஏற்பட்டமாதிரி எந்த தடயங்களும் காணப்படவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு எந்த கருத்தும் கூற இயலாது. சுகுமார், சந்திரசேகர் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றாலும் நான் வேண்டுமென்றே இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் வந்தார்கள். CCTV Camera வில் பதிவாகியிருக்கும். சுகுமார், சந்திரசேகர் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக CCTV Camera வில் பதிவை எடுத்து போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் என் புகாரில் நான் குறிப்பட்ட சாதியை சேர்ந்தவர் என்பதால் தான் என்னை துன்புறுத்தினார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிகள் மீது தொடர்ச்சியாக புகார் கொடுத்துள்ளேன் என்று கூறியுள்ளேன். சாதி கண்ணோட்டத்தில் தான் சம்பவம் நடந்தது என்று கூறியுள்ளேனா என்றால் புகாரில் குறிப்பிடவில்லை. என்னுடைய குடும்ப உறுப்பினர்களை 1 ஆம் எதிரி தனிப்பட்ட முறையில் சந்தித்து பேசியது கிடையாது என்றால் சரிதான். என்னை தவிர என் குடும்ப உறுப்பினர்களை 1 ஆம் எதிரிக்கு தெரியாது என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் நிறைய புகைப்படங்கள் பொருட்கள் சேதமடைந்தது போல எடுத்து நான் இணைத்து வழக்கின் ஆவணங்களோடு சேர்த்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் சேதமடைந்த பொருட்களை போட்டோ எடுத்து போலீசாரிடம் கொடுத்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் எதிரிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் ஒரு தகவல் சொல்லி மிரட்டியதாகவும், புகாருக்கும் முதல்

விசாரணைக்கும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. 19-10-2022 ல் சேதமடைந்த பொருட்களுக்கு 03-05-2024 அன்று சேதமதிப்பு சான்று கொடுத்துள்ளதாக நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. 31-12-2023 அன்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதன் பின்பு புலன் விசாரணையின் போது நான் சேதமதிப்பு சான்றிதழ் கொடுத்தேன். வீட்டோட சாவி மற்றும் மின்இணைப்பு அட்டை ஆகியவற்றை நான் தான் வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் வீட்டை காலிசெய்யவில்லை. என்னை வெளியே அனுப்பிவிட்டு வீட்டை பூட்டிவிட்டார்கள். என்னை வலுக்கட்டாய வெளியேற்றிவிட்டார்கள் என்று உரிமையியல் வழக்கு தொடுத்துள்ளேனா என்றால் இல்லை. புகார் தான் கொடுத்தேன். 1 ஆம் எதிரியை நான் பழிவாங்கவேண்டும் என்பதற்காக பொய்யா ன புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அவர்கள் 1 ஆம் எதிரியின் நண்பர்கள் என்பதால் 2,3 எதிரிகள் மீது புகார் கொடுத்து இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய சாதி என்ன என்று எதிரிகளுக்கு தெரியாது என்றாலும் ஆகவே இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

SESSIONS CASE NO. 227 / 2024

| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Sakunthala |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of February, 2026.

(A1 to A3 are present)

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

**நேரம் 15.15 மணி**

நான் சென்னை அயப்பன் தாங்களில் வசித்து வருகிறேன். ஆஜர் 2, 3 எதிரிகளை எனக்கு தெரியாது. 1 ஆம் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் மாடிக்கு சென்றபோது வண்டியில் சாமான் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். வேறு எதுவும் தெரியாது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் போலீசார் விசாரணையில் என் பக்கத்து வீட்டில் கோபிநாத் என்பவருக்கு சொந்தமான வீட்டில் கமல்ஆனந்த் என்பவர் வாடகைக்கு தங்கியிருந்ததாகவும் வீட்டில் உரிமையாளர் கோபிநாதனுக்கும் வாடகைதாரர் கமல்ஆனந்த் என்பவருக்கும் அடிக்கடி வீடு சரிசெய்வது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்ததாகவும், கடந்த 19-10-2022 ஆம் தேதி சுமார் காலை 10.00 மணிக்கு நான் வீட்டில் இருக்கும்போது ஆஜர் எதிரிகள் கோபிநாத், சுகுமார், சந்திரசேகர் ஆகியோர் கமல்ஆனந்தை வீட்டை காலி செய்யுமாறு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அந்த சத்தம்கேட்டு நான் சென்று பார்த்ததாகவும், கமல்ஆனந்த் என்பவர் வீட்டுஉரிமையாளர் கோபிநாதனிடம் வீட்டை நான் 4.00 மணிக்கு பொருட்களை ஏற்றி காலி செய்வதாக சொன்னதாகவும், அங்கிருந்த ஆஜர் எதிரிகள் உடனே காலிசெய்யவேண்டும் என்று கமல்ஆனந்தின் வீட்டில் நுழைந்து சந்திசேகர் என்பவர் முதலில் நுழைந்ததாகவும், அதை நானும் எங்கள் தெருவை சேர்ந்த ஜானேட் என்பவரும் பார்த்ததாகவும், அப்போது சுகுமார் என்பவர் கமல்ஆனந்த் கழுத்தை பிடித்து கையால் அடித்து அவரை நகர விடாமல் தடுத்து நிறுத்தியதாகவும், அப்போது கோபிநாத் மற்றும் சந்திரசேகர் இருவரும் கமல்ஆனந்திற்கு சொந்தமாக வீட்டிலுள்ள பொருட்களை தூக்கி வீசியதாகவும், அப்போது கமல்ஆனந்த் சத்தம் கேட்டதாகவும் சுகுமார்என்பார் கமல்ஆனந்த் பார்த்து அசிங்கமான வார்த்கதகளால் திட்டி மிரட்டியதாகவும், அப்போது சந்திரசேகர் அங்கிருந்த பிளாஸ்டிக் பைப் எடுத்து கமல்ஆனந்த்தை அடித்ததாகவும், சம்பவத்தை பார்த்ததாக நான் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 227 / 2024

| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Ezhumalai |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of February, 2026.

(A1 to A3 are present)

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

**நேரம் 15.20 மணி**

நான் சென்னை அய்யப்பன் தாங்கலில் வசித்து வருகிறேன். நான் 8, 9 வருடமாக Tata Ace லோடு வண்டி டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். SRMC காவல் நிலையத்திலிருந்து 300 மீட்டர் தூரத்தில் ஒரு வீட்டை காலிசெய்யவேண்டும் என்று சொன்னார்கள். EVP பார்க் அவென்யுவில் வீடு காலி செய்யவேண்டும்

என்று ரவி என்பவர் என்னை கூட்டி சென்றார். நான் போகும் போது வீட்டின் வெளியில் பாதி சாமான் இருந்தது. பாதி சாமான் ரோட்டில் இருந்தது. நான் ரவியிடம் என்ன வீட்டில் ஏதாவது பிரச்சனையா சாமான் ஏன் ரோட்டில் கிடக்கிறது என்று கேட்டேன். வாடகைதாரருக்கும் வீட்டு உரிமையாளருக்கும் பிரச்சனை ஆகவே வீட்டின் உரிமையாளர் சாமானை எடுத்து வெளியே போட்டுவிட்டார் என்று கூறினார். உங்களுக்கு எந்த பிரச்சனையும் வராது பக்கத்து தெருவில் வீடு பார்த்துள்ளார்கள். அங்கு சென்று பொருட்களை வைக்க வேண்டும் என்று கூறினார்கள். இரண்டு முறை வண்டியில் பொருட்களை லோடு எடுத்து சென்று பக்கத்து தெருவில் வைத்தேன். ஒருமுறை வீட்டிற்கு வெளியே இருந்த பொருட்களை எடுத்தேன். மற்றொரு முறை காம்பவுண்டு உள் இருந்த பொருட்களை எடுத்தேன். இந்த சம்பவம் நடந்து சுமார் 3 வருடங்கள் இருக்கும். தற்போது என்னிடம் அந்த Tata Ace வண்டி என்னிடமில்லை.

**இந்நிலையில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் போலீசார் விசாரணையில் கடந்த 19-10-2022 ஆம் தேதி சுமார் காலை 10.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் கோபிநாத், சுகுமார், சந்திரசேகர் ஆகியோர் கமல்ஆனந்தை வீட்டை காலி செய்யுமாறு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், கமல்ஆனந்த் என்பவர் வீட்டுஉரிமையாளர் கோபிநாதனிடம் வீட்டை நான் 4.00 மணிக்கு பொருட்களை ஏற்றி காலி செய்வதாக சொன்னதாகவும், அங்கிருந்த ஆஜர் எதிரிகள் உடனே காலிசெய்யவேண்டும் என்று கமல்ஆனந்தின் வீட்டில் நுழைந்து சந்திசேகர் என்பவர் முதலில் நுழைந்ததாகவும், அப்போது சுகுமார் என்பவர் கமல்ஆனந்த் கழுத்தை பிடித்து கையால் அடித்து அவரை நகர விடாமல் தடுத்து நிறுத்தியதாகவும், அப்போது கோபிநாத் மற்றும் சந்திரசேகர் இருவரும் கமல்ஆனந்திற்கு சொந்தமாக வீட்டிலுள்ள பொருட்களை தூக்கி வீசியதாகவும்,

அப்போது கமல்ஆனந்த் சத்தம் கேட்டதாகவும் சுகுமார்என்பார் கமல்ஆனந்த் பார்த்து அசிங்கமான வார்த்கதகளால் திட்டி மிரட்டியதாகவும், அப்போது சந்திரசேகர் அங்கிருந்த பிளாஸ்டிக் பைப் எடுத்து கமல்ஆனந்த்தை அடித்ததாகவும், இந்த சம்பவம் குறித்து ரவி என்பவர் என்னிடம் சொன்னதாகவும் நான் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

Tata Ace வண்டி பற்றிய விவரங்களை போலீசாரிடம் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய ஓட்டுநர் உரிமத்தின் நகலை என்னிடம் போலீசார் கேட்டு வாங்கவில்லை என்றால் சரிதான். நான் பொருட்களை ஏற்றி சென்று இறக்கியதற்காக ரசீதை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.